மராட்டியர் திருமண மரபுகள்

க்ஷத்திரிய மராட்டி விவாஹ சம்பிரதாயங்கள்

T13127
R005A02
13127

ஆசிரியர் : B. தேவராஜிராவ்,
R. M. S. காலனி, தஞ்சாவூர்.

மீரா பிரிண்டர்ஸ்

1610, தெற்கு வீதி, தஞ்சாவூர்-9

மீரா கம்ப்யூட்டர்ஸ்

&

ஜெராக்ஸ்

லேசர் பிரிண்ட், ஆப்செட் பிரிண்ட்,
ஸ்கிரீன் பிரிண்ட், பைண்டிங்.

நாதன் பிரிண்டர்ஸ்

கீழவீதி, தஞ்சாவூர்-1.



முகவுரை

அடியேனுக்கு உள்ளூர வெகுநாட்களாக ஓர் உணர்வு ஏற்பட்டு நம் இனத்தவர்கள் (மராட்டியர்) நம் திருமண மரபுகளையும் அவற்றின் அடிப்படை விவரங்களையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை எண்ணத்தில் இச்சிறிய நூலை எழுத முற்பட்டேன். எனக்கு பெரும் ஊக்கமளித்து இந்நூலை எழுதஊக்கமளித்து

இந்நூலை எழுத உதவி புரிந்தவர்கள்

1. காலஞ்சென்ற தக்ஷின மராட்டிய மண்டலின் தலைவவ்ராக இருந்த
   உயர்திரு. **இராதாகிருஷ்ண காடேராவ்** அவர்கள்
   திருப்பூந்துருத்தி.
2. திரு. **கிருஷ்ணசாமி மாடிக்**, B.A. அவர்கள்,
   அரண்மனை, தஞ்சாவூர்.
3. காலஞ்சென்ற
   திரு T. N. **சாமிநாத்ராவ் தோட்கர்** அவர்கள்,
   நாதன் அச்சகம், கீழவீதி, தஞ்சாவூர்,
4. காலஞ்சென்ற திரு. T. N **குப்புராவ்** அவர்கள்
   2683, ராஜகோபால் சுவாமி கோவில் தெரு, தஞ்சை.

மேலே கூறிய எல்லோருடைய அறிவுரைகளாலும் ஆசியாலும் இதை எளிமையாகவும், சாஸ்திர சம்பிர தாயங்களுக்கு முரண் இல்லாத வகையிலும் தொகுத்து எழுதி முடித்து நம் இனத்தவர்களுக்கு பயன்படவேண்டும் என்று எண்ணி இந்நூலை வெளியிடுகிறேன்.

எனக்கு குடும்பம் பெரியது இதை புத்தக வடிவில் வெளியிட எனக்கு பொருளாதாரம் கிடையாது. நம் இனத்தவர் பலரிடம் இதை புத்தக வடிவில் வெளியிட முயற்சி செய்தேன், இயலவில்லை. தற்சமயம் தஞ்சை தக்ஷிண மராட்டா மத்திய சங்கத்தின் துணைத் தலைவர் திரு. R. **தியாகராஜ ராவ் டோய் போடே** அவர்கள் நான் எழுதிய இந்நூலை அச்சிட்டு வெளியிட முன் வந்துள்ளார்கள். அவருக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்மவர்கள் இந்நூலை படித்து, காலப்போக்கினை அனுசரித்தும், அவரவர் பொருளாதார வசதியினை அனுசரித்தும் இயன்ற அளவுக்கு தேவையான அடிப்படை சடங்குகளின் மரபுகளைப் பின்பற்றித் திருமணங்களை நடத்தி பயன் பெறுமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

B. தேவாஜிராவ்,

33, R. M. S. காலனி,
நாஞ்சிக்கோட்டை ரோடு,
தஞ்சாவூர்.

அணிந்துரை

மராட்டியர்கள் பழங்காலம் முதல் விவாக சடங்குகளை பலவற்றை செய்து வந்தவர்கள். அது தற்காலத்தில் பழமையாவும் மாறி கல்யாண புரோகிதர்கள் இஷ்டப்படி சடங்குகள் நடக்கலாயின. இன்னும் காலப்போக்கில் நம் சம்பிரதாயங்கள், சடங்குகள் அறவே மறந்து மாறி விடும் என எண்ணி தஞ்சை திரு. **தேவாஜிராவ் காச்சரே** அவர்களை இது சம்பந்தமாக விவாக சடங்குகளை தொகுத்து புத்தக வடிவில் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் கேட்டுக்கொண்டேன். அவரும் அதற்கு இணங்கி பல விவாகங்களுக்கு சென்று முதியோர்கள், மூதாட்டியர்கள் மற்றும் புரோகிதர்களையும் சந்தித்து இந்த "விவாக சமஸ்காரம்" என்ற நூலை வெளியிடுகிறேன். இதற்கு உதவிய அமரர் திரு. **T. N. சாமிநாத ராவ் தோட்கர்** அவர்கள், நாதன் அச்சகம், தஞ்சாவூர், அமரர் திரு. **T.N. குப்புராவ்** அவர்களுக்கும் இந்நூலை காணிக்கை ஆக்குகிறேன். இந்த புத்தகம் ஒவ்வொரு மராட்டியர் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டும். கல்யாணம் செய்வது என்பது அவரவர்கள் பொருளாதார அடிப்படையிலேயே நடத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். வசதி படைத்தவர்களும், வசதி குறைந்தவர்களும் அவரவர் சக்திக்கேற்ப விவாகங்களை செய்ய இந்நூல் பெரிதும் துணை செய்யும்.

இங்ஙனம்,

A. கிருஷ்ணசாமி ராஜே மாடிக், B.A.,
சரபோஜி மன்னரின் கொள்ளுப் பேரன்,
அரண்மனை, தஞ்சாவூர்.

வாழ்த்துரை

ரிக்வேதிகள் செய்ய வேண்டிய சம்ஸ்காரங்களை (சடங்குகளை)ப் பற்றி திரு. B. **தேவாஜி ராவ்** அவர்கள் மிகவும் சிரமப்பட்டு க்ஷத்திரிய மராட்டியர்களுக்காக இந் நூலை என்னிடமும் திரு. A. **கிருஷ்ணசாமி ராஜே மாடிக்,** B.A., அவர்கள் உதவி கொண்டும் மற்றும் திரு. S. **வெங்கடராகவாச்சாரி** அவர்கள் எழுதிய ரிக் வேதிகளின் பதினாறு சுப சம்ஸ்காரங்கள் என்ற புத்தகத்தையும் அடிப்படையாகக் கொண்டு மராட்டியர்களுக்கு தேவையானபடி இந்நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் ஒவ்வொரு மராட்டியர் வீட்டிலும் இருக்கவேண்டியது அவசியம் ஆகையால் எல்லா மராட்டியர்களும் இந்த புத்தகத்தை வாங்கி நமது பின் சந்ததியினருக்கும் நம் விவாக சடங்குகள் உதவிட வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

T. N. குப்பு ராவ்,

ராஜகோபாலசாமி கோவில் தெரு,

தஞ்சாவூர்.

Rajah Sri Off: 04362/53384
S. Babaji Rajah Bhonsle Chattrapathy, B.E,
Senior Prince,
Hereditary Trustee, Palace Devasthanam,
Thanjavur-613 009.

வாழ்த்துரை

மராட்டியர்களது குடும்பம், மரபு பற்றிய ஆய்வை இதுவரை விரிவாக எடுத்துக்கொண்டு பலர் செய்திருந்தாலும் இந்நூலாசிரியர் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பொன்மொழிப்படி மராட்டியர் திருமணச் சடங்குகள் பற்றி அருமையாக, மிக எளிய நடையில் எழுதியுள்ளமை வரவேற்கத் தக்க ஒன்று.

இம்மரபினர் அனைவரும் தற்கால நாகரிக முறைப் படி மாறாமல் பழைய முறைப்படி திருமணங்களை செவ் வனே நடத்த இந்நூல் மிகஉதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு தலைப்பின் கீழ் கூறப்பட்டுள்ள செய்தி களும் 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' தெற்றென விளங்குமாறு கூறப்பட்டுள்ளது. இந்நூள் சிறந்த முறை யில் உருவாக உதவியோர்க்கும், இந்நூலை உருவாக்கிய திரு, **பி. தேவாஜிராவ்** அவர்களுக்கும் நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன். இதுபோன்ற பல நூல்களை இயற்றி புகழ்பெற பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,

எஸ். பாபாஜி ராஜா பான்ஸ்லே.

Res : ☏ 04362/31486, 35268
Huzur Mahadi, Palace,
Thanjavur-613009,
Tamil Nadu State,
INDIA.

வாழ்த்துரை

தஞ்சையில் வசித்து வரும் க்ஷத்திரிய மராட்டியர்களின் திருமண சடங்குகளை முறையாக செய்வதற்காக திரு. **தேவாஜி ராவ்** அவர்கள் முயற்சி எடுத்து என்னிடம் தெரிவித்தார்கள். நான் அவருக்கு சென்னை சென்று இருந்த பொழுது திரு. V. S. **வெங்கடராகவச்சாரியார்** வெளியிட்டுள்ள ரிக் வேதிகளின் 16 சம்ஸ்காரங்கள் (சடங்குகள்) என்ற நூலை வாங்கி வந்து கொடுத்தேன். திரு. **தேவாஜி ராவ்** அவர்கள் அந்த நூலை படித்து நம் சமூகத்தினர் அனுஷ்டித்துக் கொள்ள தேவையானவைகளைத் தொகுத்துக் குறிப்பிட்டுள்ளார். இது யாவரும் படித்து பயன்பெற ஏதுவாகவும், சாஸ்திரங்களுக்கு முரண் இல்லாத வகையிலும் விஷய ஞானத்துடன் தொகுத்து தந்துள்ளார். இதை திரு. A. **கிருஷ்ணசாமி ராஜே மாடிக்**, B.A., அவர்கள் இதை மேலும் செம்மைப்படுத்தி திருத்தங்கள் செய்து உள்ளதால் இதை யாவரும் கடைப் பிடிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

T. N. சாமிநாத் ராவ் தோட்கர்,

நாதன் அச்சகம்,

கீழவீதி, தஞ்சாவூர்.

வாழ்த்துரை

தஞ்சாவூரில் வசித்து வரும் அருந்திறல் வாய்ந்த [illegible] கிருத்திகளை முறையாக வெளிப்படுத்த ஸ்ரீ. வேதநாயகம் பிள்ளை அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் அடிக்கடி சொன்னது போன்ற [illegible] திரு V.S. [illegible] 16 [illegible] தொகுத்து ஸ்ரீ. வேதநாயகம் பிள்ளை அவர்கள் அந்த நாலை படித்து [illegible] தேவையான வகைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இது பாராட்டத்தக்க பணியாகும் [illegible] தொகுத்து தந்துள்ளார். இதை திரு. A. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், B.A., அவர்கள் இதை மேலும் வெளியிடுவது [illegible] இதை யாவரும் வாங்கி பயன்பெற வேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

T. N. ராஜரத்தினம் பிள்ளை

நாதஸ்வர [illegible],

[illegible]

மராட்டியர் திருமண மரபுகள்

(க்ஷத்திரிய மர்ரட்டி விவாஹ சம்பிரதாயங்கள்)

1. நிச்சயதார்த்தம் (சாக்கர் பூடா)
2 முகூர்த்த தேதி நிர்ணயித்தல்
3. விநாயகர், இஷ்ட, குல தெய்வ பூஜைகள்
4. சேயிச்ச முகூர்த்தம்
5. மஞ்சள் தேவதா பிரதிஷ்டை
6. திருமாங்கல்யம் கோர்த்தல்
7. மலி எடுத்தல் (தேல் சாடி) எண்ணை ஸ்நானம் (திருஷ்டி கழித்தல்)
8. வாதாவன் (மாப்பிள்ளை கோவிலுக்கு செல்லுதல்)
9. வர பூஜா (பூணூல் அணிவித்து மது பாக்கம் அழித்தல்)
10. பாணி கிரகணம் (4 தொன்னையில் தண்ணீர் ஊற்றுதல், மாப்பிள்ளை காலை பெண்ணின் தகப்பனார் கழுவி ஆசமனம் செய்தல்)
11. கௌரிஹர பூஜை, கன்யா பூஜை
12. மஞ்சள் அட்க்ஷதை (மஞ்சள் கலந்த அரிசி)
13. கன்யா தானம் (தார் போடுதல்)
14. சமய கங்கணம் (5 or 7 or 9 பேர் நூல் சுற்றுதல்)
15. மாங்கல்ய தாரணம்
16. லாஜா (பொரி) ஹோமம்
17. சப்தபதி (அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்) மிஞ்சி மெட்டி கால்விரலில் அணிவித்தல்

18. சூன்மூக் தேக்ன (சுரு மூக்கு) மாமியார் மருமகள் முகம் பார்த்து பெயர் வைத்து, பதர் முக்காடு போட்டு ஆபரணம் அணிவித்தல்

19. படண் (பெண், மாப்பிள்ளை போஜனம் செய்தல் ஒருவருக்கு ஒருவர் ஊட்டி விளையாடுதல்

20. சாடே (வராத்) பெண்ணுக்குப் பட்டுப்புடவை உடுத்தி துஸ்துப் போட்டு பெண் மாப்பிள்ளை மணவறை சுற்றுதல்

21. பழதான் முகூர்த்தம் (சாந்தி முகூர்த்தம்)

22. மேஜ்மாணிக் சாப்பாடு (மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு முதலில் விருந்து செய்தல்)

23. மறுநாள் மஞ்சள் நீர் விளையாட்டு

24. மலி எடுத்தல் (திருஷ்டி கழித்தல்)

25. மாப்பிள்ளையின் சகோதரி ஒரு தாம்பாளத்தில் அக்ஷதை, மஞ்சள், குங்குமம், மஞ்சள்தூள் கலந்த மாவினால் ஆன விளக்கேற்றி மணவறைக்குப் பின் பாக நிற்பது அக்கால மரபு இதற்கு ஹத்வா என்று கூறுவர். இது மாப்பிள்ளை பிள்ளையார் கோவிலுக்குப் போகும் போது கூடவே சென்று திரும்பி வந்து மணவறைக்கு பின்னால் நிற்பது வழக்கம்.

மஞ்சள் தேவதா பிரதிஷ்டை

1. வீட்டு சாமி பூஜை செய்தல்
2. அங்குரார்ப்பணம் (முகூர்த்த கால் நட்டு பூஜை செய்தல்)
3. கணேச பூஜை
4. கலச பூஜை, வருண பூஜை
5. நவக்கிரக பூஜை

6. நாந்தி பூஜை (பிதுர்க்களுக்கு வேண்டிய பூஜை செய்தல்)

7. சிவாப சந்து

8. கலச வருண பா தோர்த்தம் (பாத பூஜை)

விவாஹ சுபமுகூர்த்த லக்ன நிச்சய பத்திரிகை

நிச்சயதார்த்தம்

பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் கலந்து ஜாதக பொருத்தம் பார்த்து பிறகு நல்ல நாளில் உறவினர்களுக்கு சொல்லி பெண் வீட்டில் கூடி பெண்ணிற்கு நிச்சயதார்தம் செய்வார்கள். மாப்பிள்ளை வீட்டார் பெண்ணிற்கு அட்டவணையில் கண்ட சாமான்களுடன் பெண் வீட்டிற்கு செல்வார்கள். பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு போஜனம் அளிப்பார்கள். மேளத்திற்கு ஆன செலவு மாப்பிள்ளை வீட்டாரைச் சேர்ந்தது. மாப்பிள்ளை வீட்டார் 5 அல்லது 7 அல்லது 9 அல்லது 11 தட்டுகளில் புஷ்பம், மாலை, சர்க்கரை, வாழைப்பழம், பழவர்க்கங்கள் வெற்றிலை சீவல், புடவை ரவிக்கை, சீப்பு கண்ணாடி, பவுடர், சோப், குங்குமச் சிமிழ் முதலியவைகளை தட்டில் நிரப்பி அருகில் உள்ள கோவிலுக்குச் சென்று பூஜை செய்து தட்டுகளை சுமங்கலிகள் எடுத்து உறவினர்கள் உடன் வருவார்கள் மேளவாத்தியத்துடன் பெண்ணின் வீட்டிற்கு வருவார்கள் தட்டுகளை பெண் முன்பாக வைத்து விடுவார்கள். பிறகு மாப்பிள்ளை வீட்டார்கள் சுமங்கலிகள் 5 அல்லது 7 பெயர்கள் மஞ்சள் தடவி சர்க்கரையிட்டு புதிய வஸ்திரங்கள் கொடுப்பார்கள்

அதை பெண் உடுத்தி வந்து உட்கார்ந்த பிறகு 5 அல்லது 7 சுமங்கலிகள் மஞ்சள் தடவி குங்குமத்தினால் நெற்றியில் மளுவட் தடவி பிறகு தாண்டா கட்டி மாலை அணிவித்து சர்க்கரை போட்டு தலையில் புஷ்பம் வைக்கவேண்டும். சந்தனம் தடவி பொட்டு வைத்து பிறகு ஆர்த்தி எடுத்து பெண்ணை எழுப்புவார்கள். இது சமயம் பெரியவர்கள் கலந்து பேசி முகூர்த்தம் எப்பொழுது செய்வது என்ன, என்ன சீர்வரிசை செய்கிறார்கள் என்று முடிவு எடுப்பார் கள். அய்யரைக் கொண்டு முகூர்த்தபத்திரிகையும் எழுது வது வழக்கம். பிறகு எல்லோருக்கும் சந்தனம், புஷ்பம், பழம், வெற்றிலை சீவல், சர்க்கரை கொடுப்பார்கள். இது சமயம் பெண் பெரியோர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற வேண்டும் பிறகு எல்லோரும் போஜனம் செய்வார்கள்.

மஞ்சள்
குங்குமம், புஷ்பம், தாண்டா மாலை
கண்ணாடி, சீப்பு
சோப்பு, பவுடர்
தேங்காய் 5 அல்லது 7
வெற்றிலை சீவல்
வாழைப்பழம்
ஜீனி, கல்கண்டு
மிட்டாய்
மற்ற பழங்கள்
புடவை
ரவிக்கை
பாவாடை
தாண்டா & மாலை

} இவைகளை மேலே சொன்னபடி தட்டில் வைத்து பெண்ணுக்கு சாங்கியம் செய்வார்கள்

நிச்சயதார்த்த பத்திரிகை

நிகழும் ___________ வருஷம் ___________ மாதம் ___ தேதி ஆங்கில தேதி ( ) கிழமை _________ _________ பட்சம் __________ திதி __________ நட்சத்திரம் __________ யோகம் லக்னம் _________ இது கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி _________ நாழிகைக்கு மேல் நாழிகைக்குள் காலை _________ மணிக்கு மேல் மணிக்குள் லக்னத்தில் ___________

மகா ஸ்ரீ ஸ்ரீ அவர்கள் குமாரத்தி ______________________ க்கு மகா ஸ்ரீ ஸ்ரீ அவர்கள் குமாரருக்கு ______________________ (பாணிக்கிரஹணம்) (கன்னிகாதானம்) விவாஹம் செய்துக் கொடுக்க பெரியோர்கள் முன்னிலையில் நிச்சயிக்கப்பட்டு ___________ வருஷம் மாதம் தேதி கிழமையன்று இருவரும் சம்மதித்து எழுதிக் கொடுத்த விவாஹ முகூர்த்த லக்ன நிச்சயதார்த்த பத்திரிகை.

இங்ஙனம்,

தேதி

ஊர் கையெழுத்து.

இருவீட்டாரும் கையெழுத்து போடவேண்டும்.

விவாஹ விளக்கம் :

விவாகம், உத்வாஹம், பரிணயம், உபயமனம், பாணிக்கிரஹணம் இவை திருமணத்தைக் குறிக்கும் சொற்கள் முதலிரண்டு பதங்கள் மணமகளை வீட்டிற்கு அழைத்துச் செல்வதைக் குறிப்பதாகும். உபயமனம் என்பது கையைப் பற்றுதல் என்ற பொருளுடையது. பாணிக்கிரஹணம் என்பது சாஸ்திர முறைப்படி ஒரு கன்னிகையை மனைவி என்ற நிலைக்கு உயர்த்துகின்ற பல சடங்குகளின் தொகுதிக்கு விவாஹம் என்று பெயர். மணவறை (பௌலா) பெண்ணின் (வதுவின்) காலால் கீழ்மேல் 9 அடி அல்லது 7 அடி : தெற்கு, வடக்கு 8 அடி அல்லது 5 அடி இருக்கவேண்டும். மணவறையைச் சுற்றி நான்கு கால்கள் (தூண்கள்) அமைத்து அதற்கான பச்சை, வெள்ளை குருத்தோலைகளைக் கொண்டு தட்டிகள் நானகு செய்துபுறமும் (4 × 2) 8 தட்டிகள் கட்ட வேண்டும். அடிப்புறமும், மேல்புறமும் நான்கு தட்டிகள் வீதம் 8 தட்டிகள் கட்டவேண்டும். மணவறையின் முன் புறம் கோபுரம் போன்று தென்னை ஓலைத்தட்டிகள் கட்ட வேண்டும். இதற்கு மேல்புரம் அஸ்மான் கிரி என்று அலங்கார பூ போட்ட துணி கட்டி மேல்புறம் மூட வேண்டும். மணவறை மேற்குபுறம் மூடவேண்டும். மணவறை மேற்குப்புறம் செங்கற்களால் தேவார மாதிரி சுவர் எழுப்புதல் அந்தக்கால வழக்கம் இது மாதிரி சுவர் எழுப்புதல் ($3\frac{3}{4}$ சதுரம் மணவறை) தற்காலத்தில் $3\frac{3}{4} \times 3\frac{3}{4}$ சதுர மணவறை அமைக்கிறார்கள். சுவர் 5 அல்லது 7 அல்லது 9 அடி அமைக்கலாம். நாகரீக காலத்தை ஒட்டி பெரும்பாலும் இம்மாதிரி மணவறை அமைப்பதில்லை. கல்யாண மண்டபத்தில் உள்ள மணவறையே உபயோகிக்கிறார்கள்.

அல்லது வாடகைக்கு மணவறை வாங்கி விவாஹம் செய்கிறார்கள்.

மணவறையில் கட்டவேண்டியது (ஔவிச்ச மடுக்க கலையம்) கலயங்களில் போடும் சாமான்கள்

1. எள் உருண்டை 2. பொரி உருண்டை 3. கோட்சேவு (தித்திப்பு சேவு) 4. லட்டு 5. பொட்டுக்கடலை உருண்டை 6. விடயம் 7. மஞ்சள் 8. குங்குமம் 9. தேங்காய் 10. வாழைப்பழம்	4 வாழைப்பூ மூடி, 4 கலவடை வரிசைக்கு 5 பானைகள் வீதம் 4×5 20 பானைகள். 20 பானைகளை குயவரிடம் வர்ணம் பூசி வாங்குவார்கள் இவைகளை (பௌலா) மணவறை தட்டி கட்டின பிறகு நான்கு மூலைகளில் அடுக்கி கயிறு கட்டிவிடுவார்கள். சாடேக்குப் பிறகு பானைகளை அவிழ்த்து எடுத்து சுமங்கலிகளுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், ரவிக்கை துண்டு வைத்து வழி அனுப்புவார்கள்.

கங்கா பூஜை (தேவக்கு கட்டுதல்)

சூப்வான் :- (முறத்தில் வர்ணம் தீட்டிய கலையம் வைத்தல்.)

முறத்தில் உள்ள கலயத்தில் போடவேண்டிய சாமான்கள்

1. பேரீச்சங்காய்
2. கடுக்காய்
3. தானிக்காய்
4 வாதாங்கொட்டை
5. கொப்பரைத் தேங்காய்
6. மஞ்சள் துண்டு
7. ரவிக்கைத்துண்டு
8. விடயம்
9. எலுமிச்சைபழம்
10. கோதுமை

இந்த சாமான்களை இரண்டு கலயத்தில் தலா ஒவ்வொன்று வீதம் போட்டு மேற்படி கலயத்தை மூடி ரவிக்கை துணியை முக்கோணமாக மடித்து மூடியில் வைத்து சிகப்பு தோம்பு துணியில் கட்டி ஒரு அப்பளக் குளவியுடன் முறத்தில் வைப்பார்கள். மேலும் இரண்டு துண்டு தோம்பு துணியில் மாவிலையைக்கட்டி அதை தாய், தந்தை எடுத்துப்போய் (வீர்பாட்டு) காவடிசிந்து நாதஸ்வரம் முழங்கச் சென்று மேற்படி தோம்புத் துணியும், சுட்ட அப்பளம் ஸ்வீட் வைத்து முகூர்த்தக் காலில் கட்ட வேண்டும் நல்லமுறையில் விக்நம் இல்லாமல் நடை பெறவேண்டுமென்று புரோகிதர் மந்திரம் கூற பூஜை செய்து வணங்கவேண்டும்.

முறத்தில் 27 நட்சத்திரங்களின் பெயர்களைச் சொல்லி ஒவ்வொரு முறத்திலும் (27×2) 54 கொட்டைப் பாக்கு வைப்பது அக்கால மரபு முகூர்த்தக்காலில் தர்வார் (கத்தி), கோடரி, கேடயம் மற்றும் ஆணி, இரும்பு வைத்து கட்டுதல் வழக்கம்.

லோன் சாமான்கள் :

1. பேரீச்சங்காய்
2. கடுக்காய்
3. தானிக்காய்
4. வாதாங்கொட்டை
5. மஞ்சள்
6. கண்ணாடி
7. சீப்பு
8. குங்குமச் சிமிழ்
9. குங்குமம்
10. கண்ணாடி (கொட்டைப்பாக்கு பாதிரி மரத்தில்)

2 மடிசெட்டு (வண்டி பர்ண) இவைகளை ஒரு தொன்னையில் வைத்து மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் தனித் தனியே கட்டுவார்கள். இது தவிர பெண்ணுக்கு லோன் முந்தியில் கட்டிய பிறகு பெண்ணின் மடியில் தேங்காய், பழம், விடயம், மஞ்சள் இவைகளைப் போட்டு 5 சுமங்கலிகள் பாட்டுப்பாடி கட்டுவார்கள். இது தவிரப் பெண்ணுக்குத் தனியாக சாமான்கள் வைத்து கட்டுவார்கள்.

மஞ்சள் தேவதா பிரதிஷ்டை

மணவறைக்கு முன்பாக ஜமுக்காளம் விரித்து அதன் மேல் புதிய வேஷ்டி விரித்து அதன் மேல் பச்சரிசி கொ்ண்டு கணபதியின் உருவம் வரைந்து (ரங்கோலி) பெண்ணுக்குத் தனி மாப்பிள்ளைக்கு தனியாக போட்டு அதன் மேல் நான்கு கலசங்களில் (சொம்பு) வைத்து அதில் நீர் ஊற்றி மாவிலை போட்டுத் தேங்காய் மேலே வைத்து மஞ்சள் நூல் கயிற்றால் சுற்றி மஞ்சள் கட்டிய நான்கு ரக்ஷைகள் தயார் செய்து அவைகளை நான்கு கலசத்தின் மேல் வைக்கவேண்டும் முதலில் பெண் வீட்டில் ஒரு ரக்ஷையை முகூர்த்தக் காலில் கட்டவேண்டும்

அதே போல் மாப்பிள்ளை வீட்டு கலசத்தில் உள்ள ஒரு ரக்ஷையை முகூர்த்தக்காலில் கட்டவேண்டும் மற்ற இரு ரக்ஷகளை (கங்கணங்களை) பெண்ணுக்கு இடது கையிலும், மாப்பிள்ளையின் வலது கையிலும் புரோகிதர் மந்திரம் கூறி கட்டவேண்டும்.

கணபதி பூஜை

முதலில் புரோகிதர் மஞ்சள்தூளில் விநாயகர் (கணபதி) செய்து அதற்குப் பூஜை செய்து பிறகுதான் முகூர்த்தக்கால் பூஜை செய்ய வேண்டும் நம் வம்சத்தினர் கொட்டைப்பாக்கை கணபதியாகப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்வது அக்காலத்தில் மரபாக இருந்துள்ளது.

கணபதி பூஜைக்குரிய மந்திரம்

கரிஷ்ய மானம் கர்ப்கர்த்தும் யேக்யதர்
பிரஸ்தியர்த்வம் பிராம்மணேய்யம் அனுக்யாம்
பிராப்ய உபவிஷ்ய

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்
சதுர்புஜம் பிரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தியேத்

சௌரங் :- (நான்கு கால்கள் உள்ள ஆசனம்)

மாப்பிள்ளையையும், பெண்ணையும் தனித்தனியே பலகை இட்டு 5 கலயத்தில் நீர் ஊற்றி மாவிலையிட்டு அதில் கயிறு சுற்றி அந்த நீரை மாப்பிள்ளை பெண் இருவருக்கும் தெளித்து பிறகு புது வஸ்திரங்கள் அணிவித்து அந்தக் கயிற்றை முகூர்த்தகாலில் கட்டவேண்டும்.

அங்குரார்ப்பணம் :- (முகூர்த்தக்கால் நடல்)

விளக்கம் :- சௌளம், உபநயனம், கோதானம், ஸமாவர்த்தனம், விவாஹம் இவற்றிக்கு அங்கமாக அங்குரார்ப்பணம் செய்யப்படுகிறது. அங்குசம விதையினின்று தோன்றும் முளை, அர்ப்பணம் இடுதல், முளை தோன்று தற்கு விதை இடுதல் என்று பொருள். அங்குரார்ப்பணம் இல்லாத கர்மா சுபகர்மாவாக கருதமுடியாது. சுபகர்மா செய்யும் தினத்திற்கு முன்பு மூன்றாவது, ஐந்தாவது, ஏழாவது நாளில் செய்யலாம். முதல் நாள் இரவிலும் சுபம் செய்யும் தினத்திலும் செய்யலாம். இதற்குத் தேவை மூங்கில் இரண்டு அதில் கணுவுக்கு காவி மற்றொன்றுக்குச் சுண்ணாம்பு (வெள்ளை) அடித்துத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

1. ப்ரஹம ஜ ஞானம்	என்று சொல்லி	நடுவில்	பிரம்மாவையும்
2. யத இந்திர	,,	கிழக்கில்	இந்திரனையும்
3. நாகேஸீ பர்ணம்	,,	தெற்கில்	யமனையும்
4. தந்த்வாயாமி	,,	மேற்கில்	வருணனையும்
5. ஸோமே தேனும்	,,	வடக்கில்	ஸோமனையும்

முதல் 5 சுமங்கலிகள் முகூர்த்த காலுக்கு கீழ்ரு மேலாக மஞ்சள் தடவவேண்டும் பிறகு குங்குமப்பொட்டு வைத்து புஷ்பம் கட்டவேண்டும். பிறகு மேலே கூறிய படி நவதானியத்தை முகூர்த்தக்காலின் அடியில் 5 பக்கம்

மேலே சொன்னபடி பிர்மா, இந்திரன், யமன், வருணன், ஸோமனை ஆவாஹனம் செய்து நவதானியத்தை சுமங் கலிகள் வைத்து அதற்கு பால் கலந்த நீர் ஊற்றி முகூர்த்தக்காலுக்கு புரோகிதர் மந்திரம் சொல்ல பூஜை செய்ய வேண்டும் சௌரங்கில் இருந்து எடுத்த நூலையும் மஞ்சள் தடவி முகூர்த்தக்காலில் கட்டவேண்டும்.

கௌரிஹர பூஜை

பெண் வீட்டு அறையில் விளக்கேற்றிவிட்டு சாமியை வைத்து (டாங்க்) வைத்து கௌரி கலயங்களை நான்கு அடுக்காக வைத்து நூல் சுற்றி மஞ்சள்தூள் பிள்ளையார் பிடித்து பூஜை செய்யவேண்டும். மாப்பிள்ளை பிள்ளையார் கோவில் போகும் போது ஆரம்பித்து திரும்பி வரும் வரையில் கௌரிஹர பூஜை கலயங்களுக்கும் மஞ்சள் நூல் சுற்றி புஷ்ப அர்ச்சனை செய்யவேண்டும். கௌரி ஹர பூஜை மாமனார் (வரனின் தந்தை) ஆரம்பம் செய்து பெண்ணுக்கு திலகமிட்டு கல்கண்டு கொடுக்கவேண்டும்.

ஐந்து சுமங்கலிகள் பெண்ணுக்கு மஞ்சள் (உஷ்ட ஹளது) 1. கன்னம் 2. கை 3. பாதம் தடவின பிறகு (சவ்ரங்கி) பலகையில் உட்கார வைத்து 5 கலயங்களில் நூல் சுற்றி நீர் ஊற்றி மாவிலைக் கொத்து போட்டு பெண்ணுக்கு மாவிலையால் தண்ணீர் தெளிக்க வேண்டும் பிறகு பெண்ணை எழுந்திருக்கச் செய்து மேற்படி நூலை எடுத்து மஞ்சள் தடவி முகூர்த்தக்காலில் 5 சுமங்கலிகள் சேர்ந்தார் போல் மேற்படி நுலைக் கட்டவேண்டும்.

பெண்ணை பெண் மாமன் உருவிய கத்தியுடன் மணவறைக்கு அழைத்து வரவேண்டும். பெண்ணுக்கு

புதிய வஸ்திரங்கள் ஆயார் தரவேண்டும் (மஞ்சள் புடவை, மஞ்சள் ரவிக்கை) இதனை (ஹளதீச்ச பத்தலே) என்று கூறுவர். பெண்ணுக்குப் புடவையை (காசோட்டா) பஞ்ச கச்சம் கட்டவேண்டும் என்பது மரபு. புதிய வஸ்திரம் கட்டின பிறகு பெண்ணுக்கு (மலுவச்) நெற்றியில் குங் குமம் தடவி, தாண்டா கட்டி அதன் பிறகு மணிடோலியும் கட்டவேண்டும்.மஞ்சள் தடவி சர்க்கரையிட்டு பிறகு தம்பதி களைத்(தாயார், தகப்பனார்) கலச வருண பாதோர்தம் (பாத பூஜை மாதா, பிதா பூஜை) பெண் தந்தையின் பாதங் களில் சந்தனம், மஞ்சள், குங்குமம் தடவி புஷ்பம் இட்டு நமஸ்காரம் செய்யவேண்டும். அப்பொழுது தாய் தந்தை இருவரும் புஷ்பம் அக்ஷதை கொண்டு பெண்ணை ஆசீர்வதிக்க வேண்டும்.

ரக்ஷா பந்தனம் (கங்கணம் **கட்டுதல்**)

கலசத்தின் மீதுள்ள மற்றொரு கங்கணத்தைப் பெண் இடது கையிலும் தேங்காய், பழம், விடயம் கொடுத் துக் கட்டவேண்டும். பிறகு 5 சுமங்கலிகள் லோன் முந்தி யில் சந்தனம் குங்குமம் தெளித்து தொன்னையை முந் தானையில் கட்டவேண்டும் பிறகு பெண்ணின் மடியில் ஒரு பாகத்தை எடுத்து மடி நிரப்பவேண்டும். தேங்காய், பழம், விடயம், மஞ்சள் வைத்து மடி நிரப்ப வேண்டும். லோன் கட்டும்பொழுது அதற்கான பாட்டை பாடி லோன் கட்ட வேண்டும்.

கங்கா பூஜை

தேவக்கு கட்டுதல் (சூப்வான்) தேவக்கு கட்டின பிறகு மறுபடியும் இருக்கை வந்து அமரவேண்டும். பெண்ணின் தாயாருக்கு தாண்டா கட்டி, சைலிபோட்டு

சர்க்கரை, சந்தனம், குங்குமம் பொட்டு வைத்து தம்பதி மரியாதை செய்யவேண்டும். இதே போல் பெண்ணின் தகப்பனாருக்கும் சைலி போட்டு சர்க்கரை சந்தன பொட்டு வைத்து மரியாதை செய்யவேண்டும். இது போலவே மாப்பிள்ளை தாயார் தகப்பனாருக்கும் மரியாதை செய்ய வேண்டும். பிறகு கலச நீரைத் தெளித்து ஆரத்தி எடுத்து பின்பு எழுப்பிச் செல்லவேண்டும்.

நவக்கிரஹ பூஜை :

9 கொட்டைப்பாக்கை வரிசைக்கு மூன்று வீதம் வைத்து அதற்கு மஞ்சள் குங்குமம் தடவி புஷ்பம் இட்டு நவக்கிரக மந்திரம், புரோகிதர் மந்திரம் சொல்ல பூஜை செய்ய வேண்டும்.

நாந்தி பூஜை :

மூதாதையர்களை நினைந்து ஒரு தாம்பாளத்தில் தேங்காய், பழம். விடயம், புஷ்பம் வைத்து கையில் வைத்துக்கொண்டு மூதாதையர்களை பூஜை செய்து புரோகிதர் மந்திரம் சொல்லவேண்டும். அப்போது கோத்திரம் (அண்ணாவ்) (பட்டப்பெயர்) களைக் கூறி மூன்று தலை முறை, முப்பாட்டனார், பாட்டனார். தந்தை இவர்களைக் கூறுவதோடு மாதா வர்க்கத்திற்கும் சேர்த்து வணங்க வேண்டும்,

திருமாங்கல்யம் கோர்த்தல் :

திருமாங்கய்யம் சிலர் ஒன்று, சிலர் இரண்டு கட்டுவர். அவரவர் பழக்கப்படி செய்யலாம். மஞ்சள் தேவதா பிரதிஷ்டை முடிந்தவுடன் மாப்பிள்ளையை ஆசனத்தில் அமர்த்தி 5 சுமங்கலிகள் சந்தனம். குங்குமம் இட்டு சர்க்கரை போட்டு மஞ்சள் கயிற்றில் திருமாங்கல்யம், கருக

மணி. பவுன்மணி சாஸ்திரத்திற்கு மூன்று கருகமணி, முத்து, பவுன்மணி, மாங்கல்யம் தலா ஒன்று கோத்து திருமால்யம் பூட்டுவதற்குச் சரியாக சோத்து வைக்க வேண்டும். 5 சுமங்கலிகளுக்கு சந்தனம் குங்குமம் இட்டு புஷ்பம் கொடுத்து விடயம், பழம், சர்க்கரை கொடுக்க வேண்டும். வசதி உள்ளவர்கள் தக்ஷணையும் கொடுப்பது உண்டு.

தேல்சாடி :

எண்ணை ஸ்நானம் லிம்போட்டி பேட்னா திருஷ்டி கழித்தல். சாஸ்திரோத்தமாக பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் 5 சுமங்கலிகள் எண்ணை ஏற்றி இறக்கி ஸ்நானம் செய்துவைத்து காணாபோட்டு பாட்டுப்பாடி லோன் கட்டி செய்யவேண்டும். மூன்று முறை செய்ய வேண்டும். பெண் தலைமுடி காய்ந்தபிறகு மளுவட்டு தடவி (நெற்றியில் குங்குமம் தடவி) ஜிக்னா முதலியன இட்டு ஸவந்தி (லகின் சூடா) நாடா, நகதா கட்டி சடை போடவேண்டும். பச்சை வளையல் அணிவித்து (சுடிதார் பத்தலே) முகூர்த்தப் புடவை வெள்ளை பச்சை பார்டர், பச்சை ரவிக்கை அணிவித்து மல்லிகைப்பூ தாண்டா தலையில் கட்டி பெண்ணை முகூர்தத்திற்கு தயார் செய்து விடவேண்டும்.

வரதாவன் :

மாப்பிள்ளை கோவிலுக்குச் செல்லுதல்: பெண் தம்பிக்கு மரியாதை செய்து வர புண்யாவசம் செய்து பிறகு மாப்பிள்ளையை மைத்துனர் (பெண்ணின் சகோதரன்) கூட்டிவந்து உட்காரவைத்து பெண் தகப்பனார் புண்யாவசனம் கொடுத்து தரனை அலங்கரித்து வர புண்யா வசனத்தில் உட்கார வைத்து பார்சிங் கட்டி

கண்ணாடி. தேங்காய், பழம் கையில் கொடுத்து, காலை வரதான் மாப்பிள்ளை பிள்ளையார் கோவிலுக்கு போய்வர வேண்டும், திரும்பி வரும்போது நுழைவாயிலில் நிற்க வைத்து மங்கள ஆர்த்தி, மஞ்சள் நீர் ஆர்த்தி எடுத்து மாப்பிள்ளை வலது காலை எடுத்து வைத்து உள்ளே வர வேண்டும். வரனை அழைத்து நாற்காலியில் உட்கார வைத்து வது(பெண்)ணின் த்கப்பனார் அர்க்க பாத்தப ஆச மணியங்கள், மதுவர்க்கம் கொடுத்து சுப ஸ்விகார செய்து பூநூல் யக்கோப வித்தாரணம் செய்து மதுபர்கத் தானம் :- பழம், சர்க்கரை, தேன், நெய் தடவி கலந்து மாப்பிள்ளைக்கு மாமனார் கொடுப்பது. மது பார்க்சும் கொடுக்க விஷ்டாம் (ஆஸனம்) 2, பாத்யம் (கால் அலம்பு வதற்கான நீர். 3. அர்க்யம் (முகம் துடைத்துக்கொண்டு நறுமணம் கலந்த நீர்) 4. ஆசனீயம் (ஆசனம் செய் வதற்கான தீர்த்தம்) இது முடிந்து மதுபர்க்கம் கொடுக்க வேண்டும் பாத்யம் என்று மூன்று முறை சொல்லி வரனின் முதலில் வலதுகால் பிறகு இடதுகால் (அல்லது) கட்டை விரல் பெண்ணின் தந்தை அலம்ப வேண்டும். அர்க்கியம் என்று மூன்று முறை கூறி வரன் கண், முகம் இவைகளை துடைத்துக் கொள்ளவேண்டும். ஆசமனீ யம் என்று மூன்று முறை கூறி அதை எடுத்துக் கொடுப் பார். இதை வாங்கி சிறிது ஜலத்தை எடுத்து அமிருதோ பஸ்தாண மலி என்று கூறி ஒரு முறை ஆசமனம் செய் வான் மணமகன், மணமகன் மூன்று தலைமுறை மனிதர் களின் பெயர்களையும் கோத்திரம், பட்டப் பெயர் (அண் ணாவ்) கூறி இந்த வரனுக்கு உமது மகளை மனைவி யாகத் தாருங்கள் என்று கூறி

"அத்ர வரணே தர்னே சாத்ரி புருஷ்ம
ப்ருயாத் இதி ஹேமாத் ரென"

பிதா, பிதாமஹா, ப்ரபிதாமஹா என்று மூவரையும் குறிப்பிடவேண்டும்.

"கன்யாம் - கனக சம்பன்னாம்

தாஸ் மாமி" என்று மூன்று முறை கூற வேண்டும். பெண்ணின் வலது கையை வரனின் வலது கையில் வைத்து பெண்ணின் தாயார் தீர்த்தத்தை தர அதை வாங்கி வரனின் கையில் தாரையாக விடவேண்டும். ஹத்வா (விளக்கு) சகுண்தாட் அக்ஷதை, ஹளது, குங்குமம் இவை மஞ்சள்தூள் கலந்த மாவினால் ஆன விளக்கு தாம்பாளத்தில் வைத்து மாப்பிள்ளையின் சகோதரி விளக்கு எரியவிட்டு மணவறைக்கு பின்புறம் நிற்க வைப்பார்கள். மாப்பிள்ளை பிள்ளையார் கோவிலுக்கு போகும் போது இந்த விளக்குடன் சகோதரி போய் வருவது அக்கால வழக்கம். மாப்பிள்ளை கோவிலுக்கு சென்றவுடன் பெண் வீட்டில் வரனுடைய பிதாவைக் கொண்டு வது கிரகத்திற்கு போய் கௌரிஹர பூஜை, கன்யா பூஜை செய்து முடித்து வதுவுக்கு கஸ்தூரி திலகமிட்டு கல்கண்டு ஜீரகம் கொடுத்து வது மாமனைக் கொண்டு வதுவை மணவறைக்கு அழைத்து வரவேண்டும். வதுவை மாமன் அழைத்து வரும்போது கையில் உருவிய தார்வார் (வாள்) வைத்துக்கொண்டு வருவது பழங்கால மரபு. காரணம் பெண்ணுக்கு மாமன் காவலாக அழைத்து வருவது வழக்கம் இதற்கு முன் மணவறைக்கு முன இரண்டு புது மூங்கில் (ஆக்ஷ்ண சக்தி வம்ச விருத்தி மூங்கில் குறுக்கில் பிரியாது.)

கூடையில் ஒன்றில் அம்மி, மற்றொன்றில் குழவி வைத்து இரண்டிலும் தாம்பு கயிறு வைக்கவேண்டும். வதுவை கிழக்கு நோக்கி அம்மியுள்ள கூடையிலும், வர

னை குழவியுள்ள கூடையிலும் நிற்க வைத்து இருவருக்கும் நடுவில் அந்தர் படுதா பிடித்து மங்களாஷ்டம் பாட வேண்டும். அந்த நேரத்தில் அக்ஷதையை எல்லோருக்கும் கொடுக்கவேண்டும். கடைசி மங்களாஷ்டம் முடிந்த பிறகு திரையை தெற்கு முதல் வடக்காக நீக்கவேண்டும். வதுவின் முகத்தை வரன் பார்க்க வேண்டும் (முகாலோபனம்) செய்தல் அதாவது பெண்ணின் முகத்தை முதன்முதல் மாப்பிள்ளை பார்ப்பதாக சம்பிரதாயம் பிறகு வது வரனின் சிரசில் அக்ஷதை போடவேண்டும் அதே போல் வரன் வது தலையில் போடவேண்டும் இதற்கு சேஜபர் என்று கூறுவர்.

கன்யாதானம் :-

(தார் போடுதல்) தாரை நீர் வார்க்கிறது வதுவை கிழக்கு நோக்கி உட்கார வைத்து வரனை மேற்கு நோக்கி உட்கார வைக்கவேண்டும். பிறகு வது, வரன் தம்பதிகளை கொண்டு சங்கல்பம், பூர்வபூஜை, கோத்திரோத்திரத்துடன் செய்து வதுவின் கை கீழே வரன் கை மேலே வைத்து அதன் அடியில் வரன் மாதா பிதா கைகளை மேலே வதுவின் தகப்பனார் கை வைத்து வதுவின் தாயார் சொம்பில் உள்ள நீரை மாவிலையைக் கொண்டு தாரை நீர் கையில் புரோகிதர் மந்திரம் சொல்லி வர நீரை ஊற்ற வேண்டும். தார் (தாரை) வாங்கிய பிறகு வதுவையும் வரனையும் சுற்றி 5 அல்லது 7 பேர் நின்று சமயகங்கணம் ரக்ஷா பந்தனத்திற்கு நூல் சுற்ற வேண்டும். இது சமயம் மாப்பிள்ளை கிழக்கு நோக்கியும், பெண் மேற்கு நோக்கியும் உட்கார வேண்டும் மேற்படி 5 அல்லது 7 அல்லது 9 நபர்கள் கல்யாணமானவர்களாக இருக்க வேண்டும் முதலில் 5 சுற்றும் மறுபடி 4 சுற்று வைத்து கீழ் கயிற்றை

மேல் நோக்கி எடுத்து மற்றதையும் எடுத்து தயார் செய்து திருமாங்கல்யம், ரக்ஷா பந்த கயிற்றில் குங்குமம் தடவி கொம்பு மஞ்சள் கட்டி ஒரு தட்டில் அக்ஷதை வைத்து இரண்டு தேங்காய் வைத்து குங்குமம் தடவிய கங்கண கயிற்றையும் தேங்காய் மேல் வைத்து மாங்கல்யத்தையும் வைத்து பெரியோர்களிடம் காண்பித்து ஆசீர்வாதம் பெற வேண்டும். ஆசீர்வாதம் வாங்கிய பிறகு பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் தனித்தனித்யே இரண்டு கங்கணங் களைத் தலா ஒன்று வீதம் கட்டவேண்டும். ஆசீர்வாதம் வாங்கும் போது வதுவை கிழக்கு நோக்கி உட்கார வைத்து வரன் வதுவுக்கு இடது பக்கம் நின்று வடகிழக்கு நோக்கி வணங்கி கையில் மாங்கல்யத்தை சரியானபடி பிடித்துக் கொண்டு இஷ்ட குல தெய்வங்களையும், பிதுர்களையும், தாய் தந்தையர்களையும் மனதார வணங்கி வதுவின் கழுத்தில் புரோகிதர் மந்திரம் சொல்ல "மாங்கல்யம் தந்து நா அனேன என்று கூறி பிறகு மங்களம் பகவான் விஷ்ணு மங்களம் மதுஸீதன" மங்களம் புண்டரீக மங்களம் கடத் வஜா மாங்கல்யத்தை தொட்டு அபிமந்தரனம் (ஜபம் செய்யவேண்டும்.)

மாப்பிள்ளை பெண் கழுத்தில் மாங்கல்ய தாரணம் செய்து 5 அல்லது 3 முடிச்சுகள் போட்டு முடிச்சுகள் மேல் வரனால் குங்குமம் தடவி தானும் இட்டு பிறகு மண்டப பிரவேசம் செய்ய வேண்டும் பிறகு

பாணிக்கிரகணம் :-

லாஜ (பொரி) ஹோமம் செய்யவேண்டும். ஹோ மத்திற்கு பொரியை புரோகிதரிடம் மூன்று முறை வதுவின் சகோதரர் வாங்கி வதுவின் கையில் கொடுத்து வரன் ஹோமத்தில் இடவேண்டும். பிறகு பாணிக்கிரகணம்

செய்வித்து ரக்ஷை (பொட்டு) வைத்து பிறகு வதுவின் சகோதரன் வரனின் கையையும் வரன் வதுவின் கையை யும் பற்றி அக்னியை மூன்று முறை வலம் வரவேண்டும் மூன்றாவது சுற்று சுற்றும் போது அம்மி வைத்து அதன் மேல் 7 பிடி அக்ஷதையை வைத்து வது கோடு கிழிக்க வேண்டும் பிறகு வரன் வதுவின் காலை அம்மி மேல் அருந்ததி காண்பித்து வரன், வதுவின் காலில் ஏல் இரவதி (மெட்டி) அணிவிக்க வேண்டும். இதற்கு சப்தபதி என்று கூறுவர். அருந்ததி நக்ஷத்திரம் சந்திரனுக்கு அருகில் உள்ளது. அது நிரந்தரமானது மற்ற நட்சத்திரம் போல் இடம் மாறுவது கிடையாது. அதனால் அருந்ததி போல கணவரோடு நிரந்தரமாக சுகத்திலும், துக்கத்திலும் ஒன் றாக மனவேறுபாடு இல்லாமல் இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே நியதி பிறகு தம்பதிகள் மணவறை யில் உட்காரவேண்டும். வதுவின் சகோதரன் வரனின் காதைத்திருகி மோதிரம் அணிவித்து விடவேண்டும். வதுவின் சகோதரனுக்கு ஆயார் செய்ய வேண்டும் சந் தனம், பொட்டு, சர்க்கரை, சைலியிட்டு வஸ்திரதானம் செய்வது வழக்கம். பிறகு பெரியோர்கள் வதுவையும், வரனையும், அக்ஷதையால் ஆசீர்வாதம் செய்வார்கள். (சேஜ் பர்ண) பிடித்தல் என்று கூறுவர். இரண்டு கையி லும் அக்ஷதை எடுத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் பெண் மாப்பிள்ளைகளுக்கும் தனித்தனியே அல்லது இரு வரையும் சேர்ந்தாற்போல தொடையிலிருந்து புஜம் சிரசு வரை அக்ஷதையை கீழ்மேலாக போடவேண்டும். (ஆசீர் வாதம் செய்ய வேண்டும்) எல்லாம் முடிந்த பிறகு வது, வரனை எழுப்பி முதலில் வதுவின் கிரகத்திற்கு கிரகப் பிரவேசம் செய்வது வழக்கம். அங்கு வது சுவாமி பூஜை (லக்ஷ்மி பூஜை செய்த பிறகு வது வரனை உட்கார

வைத்து திலகமிட்டு சந்தனம், சர்க்கரை போட்டு பழம், பால் கொடுத்து (அம்பாலிப்பின்) சடங்குகளை முடித்துக், கொண்டு வரனை மாத்திரம் வரன் இல்லத்திற்குப் போக வேண்டும்.

சூன் முக்தேக்ன :- (அதாவது மாமியார், மருமகள் முக தரிசனம் செய்தல் அதற்கான முறைகள்)

மாமியார் மடியில் மருமகளை உட்கார வைத்து மாமியார் தொடையின் கீழ் ஒரு தவலை வைப்பது வழக்கம் தவலை நிறைய கோதுமை நிரப்புவார்கள். (மாண்டிகாலி தப்பலே) என்று கூறுவர் பிறகு மாமியார் மருமகள் முகத்தை பார்த்து பெயர் வைத்து ஜவ்வாது பொட்டிட்டு தலைக்கு முக்காடு போட்டு (பதர்) கொடுத்து ஆபரணம் அணிவித்து ரக்ஷா பந்தன் கழுத்தில் கருகமணி, முத்து கோர்த்ததை பெண் கழுத்தில் மாமியார் கட்டுவார்கள். ஜரணி தேவதா பூஜை (நிர்வா நிர்வி) மணவறையில் கட்டியுள்ள 5 பானைகளை எடுத்து மாப்பிள்ளை வீட்டார் ஒரு புறம், பெண் வீட்டார் ஒரு புறம் நின்று கொண்டு (ஹாத்தி) யானை, கோடா (குதிரை) பருப்பு, உப்பு இவைகளின் விலைகளை கூறிக்கூறி கூவுவார்கள். உப்பு நீரில் கரையக் கூடியது பருப்பு கரையாதது. இது முடிந்த பிறகு வது, வரன் கிரகத்திற்குச் செல்ல வேண்டும். அப்பொழுது வரனின் சகோதரி முசல் (உலக்கை மேல்) மஞ்சள் கலந்த மாவினால் ஆன விளக்கேற்றி அதன் மேல் வைத்து வாசலில் நின்று கொண்டு வழிமறித்து யார் உள்ளே வருவது கேட்பார்கள். அதற்கு வது நான் கிரக லஷ்மி வந்துள்ளேன். வழிவிடு என்பாள். அதற்கு நாத்தினார் கிரக லஷ்மி நானிருக்க புது லக்ஷ்மி எப்படி உள்ளே வரலாம்

என்று வழிமறித்து உள்ளே விடுவார்கள். இதுவும் விவாஹச் சடங்குகளில் ஒன்று ஆகும்.

விவாஹத்தன்று மதியம் (படன்) பெண் மாப்பிள் ளை இருவரையும் உட்கார வைத்துக் கோலமிட்டு தலை வாழை இலைப் போட்டு இரண்டு நுனி இலையில் பலகார, பக்ஷணங்கள், காய்கறிகள் எல்லாம் வைத்து அன்னம் பரி மாறி இருவரையும் ஒருவருக்கு ஒருவர் ஊட்டிக்கொள்ளு தல். இதில் உறவினர்கள் கலந்து களிக்கூத்து செய்வார் கள். மாப்பிள்ளையுடைய தங்கை ஆரம்பித்து வைப்பாள். அவள் குனிந்து இலையைத் திறக்கும் போது முதுகில் ரவிக்கை துணி வைத்து குத்துவார்கள். பெண் பெயரை மாப்பிள்ளையும், மாப்பிள்ளை பெயரை பெண்ணும் சொல் வார்கள்.

சாடே (வராத்) ஊர்வலம் பெண்ணுக்கு பட்டுப் புடவை உடுத்தி மாப்பிள்ளைக்கு துஸ்து போட்டு பெண் மாமன் பெண்ணையும் மாப்பிள்ளை மாமன் மாப்பிள்ளை யையும் தோளில் தூக்கி ஆடுவார்கள் குச்சி விளையாட்டும் உண்டு. அதற்கான பாடல்களையும் பாடுவார்கள். இதற்கு ஜண்டா என்று கூறுவர். இந்நிகழ்ச்சி இளமைத் திருமணம் இருந்த காலத்தில் நடந்தது.

மேஜ் மாணிக் சாப்பாடு :-

முதலில் மாப்பிள்ளை வீட்டில் கல்யாண மண்டபத் தில் சம்பந்தி போஜன் செய்ய வேண்டும். பிறகு பெண் வீட்டில் விருந்து (மேஜ் மாணிக் சாப்பாடு செய்ய வேண டும்) இதுதான் சம்பிரதாயம்.

மஞ்சள் நீர் விளையாட்டு, மஞ்சள் அரைத்து அதை முறையுள்ளவர்களுக்கு வாயில் தடவிடுவார்கள். பெண்

மாப்பிள்ளையை உட்கார வைத்து மஞ்சள் தடவ சொல்லுவார்கள். மலி எடுத்தல், திருஷ்டி கழிப்பார்கள். பிறகு பெண்ணுக்கு குறுக்கு திலகம் (—) போல பலா சீட்டி அணிந்து வரன் வீட்டு சுவாமிக்கு மகா நைவேத்தியம் (பூஜை) செய்து அந்த பிராசதத்தை பந்துக்களுக்கு "ஹாத் பர்த்திவின்" என்ற முறையில் செய்தல்.

தக்ஷணை கொடுத்தல்

சாந்தி முகூர்த்தம், புண்யா வசனம் இரவு பல தானம் பெண்ணை விட்டு எல்லா இலைகளுக்கும் ஸ்வீட் பரிமாறச் சொல்லுவார்கள்.

திருமணத்திந்கு தேவையான சாமான்கள்

1.	பானைகள்	– 20	நான்கு மூலைக்கு 5 வீதம் (4 × 5) 20 பானைகள்
2.	வாழைப்பூ மூடி	– 4	
3.	கலவடை	– 4	
		28	

குருவிக்கலயம் 12 மூலைக்கு 3 வாழைப்பூ 1, கலவடை 1 } வரிசை 5

சௌரங் :- வார்வி கலயம் – 10 மாப்பிள்ளைக்கு 5, பெண்ணுக்கு 5

1.	முறம்	– 2	கூடை ஆகர்ண சக்தி (குறுக்கில பிரியாது) அதனால் பெண் மாப்பிள்ளையை, இரண்டு கூடைகளில் தனித்தனியே நிற்க வைக்கிறார்கள்.
2.	வார்வி கலயம்	– 2	
3.	மூடி	– 2	
4.	சாம்பார் சட்டி	– 2	
5.	சுண்ணாம் சட்டி	– 1	
6.	ஹோம சட்டி	– 1	

கயிறு — வம்ச விருத்தி
மணவறை — $3\frac{3}{4}$ சதுரம்

விரளி மஞ்சள் 100 கிராம்
மஞ்சள் குங்குமம் 100கிரரம்
பூனூல் 1 ஜோடி
கடுக்காய் 50 கி
தானிக்காய் 50 கி
பேரிச்சங்காய் 50 கி
வாதாங்கொட்டை 50 கி
தூள் 0-50
சிக்சா தூள் 0-50
சீயக்காய் தூள் 0-60
நவதானியம் 200 கி
கொட்டைப்பாக்கு 25
தேன் சிறிய பாட்டில்
சம்பா கோதுமை ½ லி
தொன்னை 100
ஜீனி 1 கிலோ
கல்கண்டு 1-00
வெல்லம் 100 கிராம்
கட்டி சூடம் 5-00
சாம்பிராணி 2-00
சந்தனம் 5-00
ஜவ்வாது 2-00
ஊது பத்தி பாக்கெட் 1
லைட்டு
மாவிலை
சமித்துக்குச்சி
நெய் 2 ரூ.
அரிசி மாவு 100 கி
கடலை எண்ணெய் 2-C0

காஜா நூல்கண்டு 1
விடயம் கட்ட நூல் க்ண்டு 1
திரிநூல் 50 கி
சிகப்பு நூல் முடிச்சு 2
துய்யா 2 மீட்டர்
ஜிகினா 5 கிராம்
கண்ணாடி 2
சீப்பு 2
குங்குமச் சிமிழ் 2
தாம்பு கயிறு 2
அம்பர் டப்பா 1
கோந்து பாட்டில் 1
பச்சை வளையல் 2 டஜன்
நெற்பொரி 1-00
கொப்பரை 1
கூடை 2
முறம் 2
கௌரிஹர செட்
வார்லி கலயம் 7
மேற்படி கலயம் மூடி 2
மணவறை
புரோகிதர்
மேளம்
நல்லெண்ணெய் 2-00
பச்சை அரிசி படி 3
பால்
தயிர்
தேங்காய் 15
வாழைப்பழம் 50

வெற்றிலை 2 கவுளி	பஞ்சபாத்திரம்
சீவல் 5-00	ஆர்த்தி
எலுமிச்சை பழம் 4	மணி
பார்சிங்	கற்பூர ஆரத்தி
மண்டோலி	சின்ன பலகை 2
தோம்பு துணி ½ மீட்டர்	பெரிய பலகை 2
காடா பீஸ் 2 மீட்டர்	கூடை 2
அப்பளக்குளவி 2	மூங்கில் தட்டு 4
முகூர்த்தக்கால் 2	குத்துவிளக்கு 3
உலக்கை 4	தாம்பாளம் 10
லோட்டா அல்லது சொம்பு 4	சந்தன பேலா 2
உத்தரிணி	

☎ 73268

தஞ்சையில்

அழகிய அச்சு வேலைகளுக்கு

ஸ்ரீ தேவா பிரிண்டர்ஸ்

2109, எல்லையம்மன் கோவில் தெரு,

தஞ்சாவூர் - 613 009.

உரிமை : **L. புருத்சோத்தம ராவ்**, B.Com., D.Co.

L. நரேந்திர ராவ்

திருமணத்திற்கு தேவையான வஸ்திரங்கள்

பெண்	**மஞ்சள்**	**மாப்பிள்ளை**
மஞ்சள் புடவை – 1		மஞ்சள் சட்டை – 1
மஞ்சள் ரவிக்கை – 1		மஞ்சள் வேஷ்டி – 1
		அங்க வஸ்திரம் – 1

முகூர்த்தம்

முகூர்த்த வெள்ளைப் புடவை	பட்டு வேஷ்டி, சட்டை
பச்சை பார்டர் – 1	அங்க வஸ்திரம்
பச்சை ரவிக்கை – 1	சட்டை - 1
ஊர்கால புடவை (பட்டு)	கோட்டு சூட்டு
ரவிக்கை – 1	குடை – 1

தம்பதி ஆயார்

வேஷ்டி,	வேஷ்டி,
அங்க வஸ்திரம்	அங்க வஸ்திரம்
புடவை, ரவிக்கை	புடவை, ரவிக்கை

புஷ்பம் வகையறா

மஞ்சள் :-		**முகூர்த்தம் :-**	
சாதா தாண்டா	– 4	எ. பழம் வெள்ளைப்பூ தாண்டா-	
சாதா மாலை	– 2	கல்யாண மாலை – 2	
கதம்ப பந்து	– 2	கைக் கடயம்	– 2
வெள்ளைப்பூ பந்து	– 1	செண்டு	– 1
மண்டோலி செட்	– 2	துரா	– 1

மங்களாஷ்டம்

சுலக்னே சா - வ - தா - ன

சிவதனய வரிஷ்டம் - சர்வ கல்யாண மூர்த்திம்
பரசு கமல ஹஸ்தம் - சோபிதம் மோதகேன
அருண குசும மாலா - வியாள லம்போதர ந்தம்
ம - ம - ஹருதய நிவாஸம் ஸ்ரீ கணேசம் நமாமி

சுலக்னே - சா - வ - தான

கஸ்தூரி திலகம் லலாட பலகே
வக்ஷஸ்தலே கௌஸதுபம் ||
நாசாக்ரே நவ மௌத்திகம் கரதலே
வேணும்கரே கங்கணம் ||
சர்வாங்கே ஹரி சந்தனாஸ குவலயம்
கண்டேச முக்தாவளிம் ||
கோபஸ்திரீ பரி வேஷ்டி தோ விஜயதே
கோபால சூடாமணி ||

சுலக்னே - சா - வ - தா - ன

ஆலீலக்னகடி சமீப நவராலா
தேவோணியா வோ கரா ||
சாஸ்திரோக்த மதுபர்க பூஜன கரா
அந்தர் படா தே தரா ||
திருஷ்ட்வா திருஷ்டி வதூவராச்சி காளே
தோகே கராவே உபே ||
ஜாவாயி ரகுராஜ ரகுவிரா
சூர்யாஷதா மங்களம் ||

சுலக்னே - சா - வ - தா - ன

மராட்டியர்
திருமண மரபுகள்
வெளியீடு : விலை ரூபாய் 10

சந்தோஷ் பதிப்பகம்
553, கீழ வீதி, தஞ்சாவூர்.

வாட்சுகள், சுவர் கடிகாரங்கள் அனைத்து
வகையான கடிகாரங்கள் சிறந்த முறையில்
ரிப்பேர் செய்து தரப்படும்.

அர்ஜுன்
வாட்ச் கம்பெனி

அய்யங்கடைத் தெரு, தஞ்சாவூர்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

திருமணம் மற்றும் அனைத்து சுப நிகழ்ச்சி
களுக்கும் வீடியோ & போட்டோ
எடுக்க சிறந்த நிறுவனம்

ஜாக்ஸன்

வீடியோஸ் & ஜெராக்ஸ்

விட்டோபா கோவில், கீழராஜ வீதி,
தஞ்சாவூர்.

☏ 71502

BLUE MAN STILL TRAC

★

KONDIRAJAPALAYAM,

Thanjavur.

☏ 30485

தஞ்சை மாமன்னர்

சரபோஜி

வரலாறு

தஞ்சை எழுத்தாளர் **நா. எத்திராஜ்**

வெளியீடு :

அரசி பதிப்பகம், அரசி புத்தக அங்காடி,

136-B, கீழராஜ வீதி, தஞ்சை.

ஸ்ரீ தேவா பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்-9. ☎ 73268.